**சார்பு நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திருமதி S.** மும்தாஜ், **B.Sc.,B.L.,**

சார்பு நீதிபதி, சீர்காழி

*******

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 25–ம் நாள் வெள்ளிக்கிழமை

**நிறைவேற்று மனு எண். 26/2023 in ARC.62/2022**

**CNR No. TNMY06-000010-2023**

சீட்டு நடத்துனர்,
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் பி.லி.,
நெ.25 பி. கச்சேரி ரோடு,
சீர்காழி ...மனுதாரர்/ தீர்ப்பு பெற்றவர்

....எதிர்.....

1. ஆர்.ஆர்.பிரதீப்
2. கே. சுகாதேவ்
3. எம்.ஒய்.ஹாஜ மெய்தின்
4. கே. தீனு
5. ஏ.வி.சுப்ராயன்
6. பி. நாகராஜன்
7. ஆர்.ராஜராமன்(இறந்தார்)

....... எதிர்மனுதாரர்கள்/ தீர்ப்பு கடனாளிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 20.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். பாலாஜி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. தே.வின்சென்ட்ராஜ் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு கேட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மனுதாரருக்கு 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டிய தொகையான ரூ.8,66,844/–த்தை 2 முதல் 7 எதிர்மனுதாரர்களிடமிருந்து வசூலிப்பதற்காக அவர்களது மாத சம்பளத்தில் ரூ.1,000/– போக, பாக்கி உள்ள தொகையில் 1/3 பங்கான விபரப்பட்டியலில் கண்டுள்ள வீதம் அவர்கள் கார்னிஷீ மூலம் புரோ ஆர்டர் ஜப்தி

செய்து தொகையை வசூலித்து தருவதற்கு உத்தரவிடக்கோரி இந்த நிறைவேற்று மனு மனுதாரரால் உ.வி.மு.ச. கட்டளை 21, விதி 48–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. ARC. No.62/2022 ல் 02.09.2022 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் செலுத்தவேண்டிய தொகையை அவர்களுடைய சம்பளம் மூலம் பற்றுகை செய்து நிறைவேற்று மனுதொகையை வசூலித்து தரவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு முதல் எதிர்மனுதார் தாக்கல் செய்துள்ள எதிரையில் சீட்டு பணத்தை முதல் எதிர்மனுதார் உரிய முறையில் செலுத்தி வந்ததாகவும், கடந்த 07.01.2021 ம் தேதியில் 7 வது எதிர்மனுதாரர் இறந்த பிறகு ஆறு மாதம் வரை ரூபாய்.30,000/– செலுத்தியதாகவும், கடன் தொகையில் இது வரை ரூ.7,00,000/– செலுத்தியுள்ளதாகவும், மேலும் முதல் எதிர்மனுதாரர் செலுத்தியுள்ள கடன் தொகைக்கான கணக்கை தாக்கல் செய்த பின்பு கடன் தொகையினை கணக்கீட்டு ஆறு மாத தவணையில் முழு கடன் தொகையையும் செலுத்திவிடுவதாக கூறியுள்ளார். ARC.No.62/2022 ன் உத்தரவின் பரிசீலனையில் மனுதாரரின் மனு விசாரணையில் எதிர் மனுதாரர்களுக்கு உரிய முறையில் அழைப்பாணை அனுப்பப்பட்டு முதல் எதிர்மனுதாரர் 10.06.2022 ம் தேதியில் ஆஜராகியும், இதனை தொடர்ந்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய பல முறை வாய்ப்புகள் வழங்கப்பட்டும் அவர்களது தரப்பில் வாதுரையை சமர்ப்பிக்க முன் வராமல் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு எதுவும் தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. மேலும், மனுதாரர் மேற்படி உத்தரவில் பிறப்பிக்கப்பட்ட தொகையை மனுதாரர் நிறுவனத்தில் வரவு வைத்ததற்கான சான்றாவணங்கள் எதுவும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

3. மேற்கண்ட பரிசீலனையில் இம்மனுவில் 7 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் மனுதாரரின் மனுவில் கோரியுள்ளபடி 2 முதல் 6 எதிர்மனுதாரர்களின் ஊதியத்தில் ரூ.1,000/– போக பாக்கி உள்ள தொகையில் 1/3 பங்கு எதிர்மனுதாரர்களின் கார்னிசி மூலம் பற்றுகை செய்து மனுதாரரின் மனு தொகைக்கு பற்றுகை செய்ய அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

**4. முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

( பற்றுகை – 25.08.2025)

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 25–ம் நாள் என்கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/–... எஸ். மும்தாஜ்)
சார்பு நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –இல்லை–
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –இல்லை–

சார்பு நீதிபதி, சீர்காழி.

நேரிய / வரைவு உத்தரவு
EP. No. 26/2023– ல்
ARC. No.62/2022
நாள் – 25.07.2025